# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2126/36 - 2019 ජුනි මස 05 වැනි බදාදා - 2019.06.05

*2126/36 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 4/81* (VIII)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23ஒ, 23ஓ மற்றும் 23ஔ ஆகிய பிரிவுகளுடனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது பத்தொன்பதாவது திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2019, யூன் 05.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் .01 ஆம் இலக்க, தேசிய சூழல் (நிலையான மூலங்களின் வெளியேற்றுகைக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. புகைபோக்கி மூலம் வெளியேற்றுகைகளை வெளியேற்றுகின்றதும், இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் நிலையான மூலத்தினை முகாமை செய்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற எவரேனுமாள், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நியமங்களுடன் இசைந்தொழுகும் வகையில் அத்தகைய நிலையான மூலத்தை நிர்மாணித்தல் வேண்டும்.

3. அட்டவணை I இல் குறித்துரைக்கப்படாத நிலையான மூலங்களிலிருந்தான எல்லா வெளியேற்றுகைகளும், இதற்கான அட்டவணை III இலுள்ள பாகம் I மற்றும் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்ட நியமங்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. ஏதேனும் கைத்தொழில் செய்முறையிலிருந்து வெளியேறும் எல்லா நிலையில்லா வெளியேற்றுகைகளும் இதற்கான அட்டவணைகள் IV, V, VI மற்றும் VII என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட முறைகளுக்கும் நியமங்களுக்குமிணங்க அளவிடப்பட்டு கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

5. வெளியேற்றுகைகளை அளவிடுவதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

6. அளவிடப்பட்ட ஏதேனும் நிலையான மூல வெளியேற்றுகையின் செறிவு, உலர் நிலைமைக்கு மாற்றப்படுதல் வேண்டும். பின்வரும் சமன்பாடு அத்தகைய மாற்றத்துக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

$$\text{உலர்வாயுச் செறிவு} = \frac{\text{அளவிடப்பட்ட செறிவு}}{[100 - (\text{ஈரப்பதன் சதவீதம்})]} \times 100$$

7. ஒழுங்குவிதி 6 இன் கீழ் உலர்நிலைமைக்கு மாற்றப்பட்ட நிலையான மூல வெளியேற்றுகையின் செறிவு, நியம நிலைமைக்கு மாற்றப்படுதல் வேண்டும். பின்வரும் சமன்பாடு அத்தகைய மாற்றத்திற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும் :-

$$C_n\ (mg/Nm^3) = C_s\ (mg/m^3)\ X\ \frac{(P_n.T_s)}{(Ps.\ Tn)}$$

இங்கு
$C_n$ = நியம நிலைமைகளில் வெளியேற்றுகையின் செறிவு
$C_s$ = மாற்றப்பட்ட உலர் வெளியேற்றுகையின் செறிவு
$P_n$ = நியம அமுக்கம் 760மிமிHg
$P_s$ = mmHg இல் புகைபோக்கியின் அமுக்கம்
$T_n$ = நியம வெப்பநிலை 273 கெல்வின்
$T_s$ = கெல்வினில் புகைபோக்கியின் வெப்பநிலை.

8. ஒழுங்குவிதி 7 இன் கீழ் நியம நிலைமைக்கு மாற்றப்பட்ட நிலையான மூல வெளியேற்றுகைச் செறிவு, இதற்கான அட்டவணை VIII இல் குறித்துரைக்கப்பட்ட இயைபான குறிப்பீட்டு ஒட்சிசன் மட்டத்திற்காக மாற்றப்படுதல் வேண்டும். பின்வரும் சமன்பாடு அத்தகைய மாற்றத்திற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் :-

$$E_r\ (mg/Nm^3) = E_m\ (mg/Nm^3) \left[\frac{20.9 - O_2\%_{ref}}{20.9 - O_2\%_{m}}\right]$$

இங்கு
$E_r$ = குறித்த எரிபொருள் குறிப்பீட்டு ஒட்சிசன் சதவீதத்தில் வெளியேற்றுகையின் செறிவு

$E_m$ = நியமப்படுத்தப்பட்ட வெளியேற்றுகையின் செறிவு

$O_2\%$ குறிப்பீடு = அட்டவணை VIII இல் குறித்துரைக்கப்பட்ட எரிபொருள் வகையின் குறிப்பீட்டு ஒட்சிசன் சதவீதம்

$O_2\%_m$ = உலர் அடிப்படையில் ஒட்சிசன் மட்டத்தின் அளவிடப்பட்ட கனவளவு சதவீதம்

9. எரிபொருள் வகையானது அட்டவணை VIII இல் குறித்துரைக்கப்படாதவிடத்து, குறிப்பீட்டு ஒட்சிசன் மட்டமானது ஆறு சதவீதமாதல் (6%) வேண்டும். ஆயினும், கலப்பு எரிபொருள் பயன்பாடு இருக்குமிடத்து, வலு உள்ளீட்டு அடிப்படையிலான பிரதான எரிபொருள் வகையானது கவனத்துட் கொள்ளப்படுதல் வேண்டும். குறிப்பீட்டு ஒட்சிசன் மட்டம் எரியூட்டிகளுக்குப் பத்து சதவீதமாகவிருத்தல் (10%) வேண்டும்.

10. பல்புடை எரிபொருள் பயன்பாட்டின் விடயத்தில், ஒவ்வோர் எரிபொருளுக்காகவும், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

11. ஏதேனும் எரிநிலைப்புள்ளி மூலத்தின் ஆகக்குறைந்த புகைபோக்கியின் உயரம் பின்வரும் சமன்பாட்டின் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் :-

$$C(m) = H(m) + 0.6U(m)$$

இங்கு H = மூலப்புள்ளியின் 5U ஆரையினுள்ளான மிக உயரமான கட்டிடத்தின் உயரம் மீட்டர்களில்

C = புகைபோக்கியின் ஆகக்குறைந்த உயரம் மீட்டர்களில்

U = திருத்தப்படாத புகைபோக்கியின் உயரம் மீட்டர்களில்

U என்பது பின்வரும் சமன்பாட்டின் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

$$U(m) = 1.36Q^{0.6}$$

இங்கு Q = மொத்த வெப்ப உள்ளீடு மெகா வாட்டில் (MW).

(i) இவ்விதியானது 0.620MW இற்குக் கூடுதலான முழு மொத்த வெப்ப உள்ளீட்டையுடைய எரிநிலை மூலங்களுக்கு ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்.

(ii) எவ்விடயத்திலும், 0.620MW இற்குக் குறைவான முழு மொத்த வெப்ப உள்ளீட்டையுடைய எரிநிலை மூலங்கள் தவிர, புகைபோக்கியின் உயரம் 20 மீட்டர்களுக்குக் குறைவாகவிருத்தலாகாது.

12. அனல் மின் நிலையங்களும் வேறேதேனும் எரிநிலை மூலமும் தொடர்பாக, கந்தகவீரொட்சைட் (SO2) வெளியேற்றுகை மூலம் விளைவிக்கப்பட்ட வளித்தீழ்ப்பு, அயலில் ஏலவேயுள்ள வளித்தர நியமங்களைப் பேணுவதற்காக, எரிபொருள் தரம், புகைபோக்கியின் உயரம் அல்லது கந்தகவீரொட்சைட் வெளியேற்றுகைக் கட்டுப்பாட்டு உபகரணங்களின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். புகைபோக்கியின் ஆகக்குறைந்த உயரம் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வளித்தர படிமம் உருவாக்கல் மென்பொருள் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய படிமம் உருவாக்க மென்பொருள் இல்லாதவிடத்து, அதிகார சபையின் அங்கீகாரத்துடன், பின்வரும் சமன்பாடானது, ஆகக்குறைந்த புகைபோக்கியின் உயரத்தை மீற்றர்களில் தீர்மானிப்பதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

புகைபோக்கியின் ஆகக்குறைந்த உயரம் $H(m) = 14Q^{0.25}$

இங்கு Q என்பது கந்தகவீரொட்சைட் ($SO_2$) வெளியேற்றுகை வீதம் கிகி/ஒரு மணித்தியாலத்துக்கு.

13. சுடுகாடுகளிலிருந்தான வெளியேற்றுகைகள், வெளியேற்றுகைக் குறைப்பு உபாயங்களைச் சுடுகாட்டின் புகைபோக்கியினுள் ஒன்றிணைப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

14. எரியூட்டிகளின் இரண்டாம் கலத்தில் வெப்பநிலையை, $1000^0$ செல்சியஸிலிருந்து $1250^0$ செல்சியஸ் மட்டத்துக்கும் தக்கவைப்புக் கலத்தை 2-3 நொடிகளுக்குமிடையே பேணுவதன் மூலம் எரியூட்டிகளிலிருந்தான டைஒக்சின் மற்றும் பியூறன் வெளியேற்றுகைகளைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

15. ஆள் எவரும், இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட தீழ்ப்பாக்கி அடிப்படையிலான வெளியேற்றுகை வரையறைகளை விஞ்சுகின்றதான ஏதேனும் தீழ்ப்பாக்கியை வளிமண்டலத்திற்குள் வெளிவிடுதலோ அல்லது வெளிச்செலுத்துதலோ ஆகாது.

16. இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

17. இவ்வொழுங்குவிதிகளில்-

"அதிகார சபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை எனப் பொருள்படும் ;

"PM" என்பது, துகள்மப்பொருள் எனப் பொருள்படும் ;

"ppm" என்பது, மில்லியனின் ஒரு பாகம் எனப் பொருள்படும் ;

"$Nm^3$" என்பது, பூச்சியம் பாகை செல்சியஸ் என்ற வெப்பநிலையையும் 760mmHg அமுக்கத்தினையும் கொண்ட நியம நிலைமைகளில் வளியின் கன மீட்டர் எனப் பொருள்படும் ;

"நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_x$)" என்பது, புகைபோக்கி ஒன்றிலிருந்து நைற்றிக் ஒக்சைட்டு (NO) மற்றும் நைதரசன் ஈரொக்சைட்டு ($NO_2$) வாயு வெளியேற்றுகைகளின் மொத்தச் செறிவு எனப் பொருள்படும்.

(ஒழுங்குவிதி 2)

## அட்டவணை I

1. அனல் மின் நிலையங்கள்
2. துணை மின்பிறப்பாக்கிகள்
3. கொதிகலன்கள்
4. வெப்பத் திரவ வெப்பமாக்கிகள்
5. எரியூட்டிகள்
6. நெருப்பிரும்பு உலைகள், வெடிப்பு உலைகள், கற்கரி அடுப்புக்கள், அடிப்படை ஒட்சிசன் உலைகள், மின்சார்ந்த (தூண்டல் மற்றும் வில்) உலைகள்
7. சீமெந்து சூளைகள்

(ஒழுங்குவிதி 2)

## அட்டவணை II

உபகரண/சாதன அடிப்படையிலான நியமங்கள்

பாகம் I

அனல் மின் நிலையங்கள்

| எரி பொருள் | மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|---|
| எண்ணெய் | C<1 MW | துகள்மப் பொருள் (PM), கந்தகவீரொட்சைட் ($SO_2$), நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_x$) | ஒழுங்குவிதிகள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளவாறான எரிபொருள் தரம் மற்றும் புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |

**அட்டவணை II**

பாகம் I இன் *(தொடர்ச்சி)*

| *எரி பொருள்* | *மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C)* | *தீழ்ப்பாக்கியின் வகை* | *வெளியேற்றுகையின் எல்லை* |
|---|---|---|---|
| எண்ணெய் | 1≤ C< 3MW | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | ஒழுங்குவிதி 12 இல் தரப்பட்டுள்ளவாறான எரிபொருள் தரம் மற்றும் புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_x$) | நீராவிச் சூழலிக்கு 650mg/Nm$^3$ |
| | | | வாயுச் சுழலிக்கு/இணைந்த சுழற்சிச் சுழலிக்கு 550mg/Nm$^3$ |
| | | | உள்ளக எரிநிலை இயந்திரங்களுக்கு 850mg/Nm$^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 200mg/Nm$^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | 3 ≤ C<25 MW | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | ஒழுங்குவிதி 12 இல் தரப்பட்டுள்ளவாறான எரிபொருள் தரம் மற்றும் புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | நைதரசன் ஒக்சைட்டு ($NO_x$) | நீராவிச் சூழலிக்கு 650mg/Nm$^3$ |
| | | | வாயுச் சுழலிக்கு/இணைந்த சுழற்சிச் சுழலிக்கு 500mg/Nm$^3$ |
| | | | உள்ளக எரிநிலை இயந்திரங்களுக்கு 850mg/Nm$^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 150mg/Nm$^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | 25≤C<100 MW | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | ஒழுங்குவிதி 12 இல் தரப்பட்டுள்ளவாறான எரிபொருள் தரம் மற்றும் புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | நைதரசன் ஒக்சைட்டு ($NO_x$) | நீராவிச் சூழலிக்கு 550mg/Nm$^3$ |
| | | | வாயுச் சுழலிக்கு/இணைந்த சுழற்சிச் சுழலிக்கு 450mg/Nm$^3$ |
| | | | உள்ளக எரிநிலை இயந்திரங்களுக்கு 700mg/Nm$^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 150mg/Nm$^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |

## அட்டவணை II

*பாகம் I இன் (தொடர்ச்சி)*

| எரி பொருள் | மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|---|
| எண்ணெய் | C≥100 MW | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 1. முதலாவது 500MO இற்கு நாளொன்றுக்கு ($SO_2$) இன் ஆகக்கூடியது 14 மெற்றிக் தொன்களுக்கு அமையவும் ஒவ்வொரு மேலதிக MW ஒன்றிற்கு நாளொன்றுக்கு ஆகக்கூடியது 28 கிகி ($SO_2$) வுடன் புதிய மின் நிலையங்களுக்கு 850 மிகி/ $Nm^3$<br>2. ஏலவேயுள்ள மின் நிலையங்களுக்கு எரி பொருள் தரத்தின் மூலம் கட்டுப்படுத்தப் படுதல் வேண்டும். |
| | | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | நீராவிச் சுழலிக்கு 500mg/$Nm^3$ |
| | | | வாயுச் சுழலிக்கு/ இணைந்த சுழற்சிச் சுழலிக்கு 450mg/$Nm^3$ |
| | | | உள்ளக எரிநிலை இயந்திரங்களுக்கு 650mg/$Nm^3$ |
| | | துகள்மப்பொருள் (PM), | 150mg/$Nm^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| உயிர்த் திண்மம் | C< 0.5MW | துகள்மப்பொருள் (PM)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதி 11 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப் படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 25% ஒளிபுகாநிலை |
| | 0.5≥C<3MW | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | 500mg/$Nm^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 250mg/$Nm^3$ |
| | | புகை | 25% ஒளிபுகாநிலை |
| | C≥3 MW | நைதரசன் ஒக்சைட்டு ($NO_X$) | 450mg/$Nm^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 200mg/$Nm^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | C<50 MW | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 1600mg/$Nm^3$ |
| | | நைதரசன் ஒக்சைட்டு ($NO_X$) | 750mg/$Nm^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 200mg/$Nm^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |

**அட்டவணை II**

பாகம் I இன் *(தொடர்ச்சி)*

| எரி பொருள் | மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|---|
| நிலக்கரி | C≥ 50MW | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 1. முதலாவது 500MW இற்கு நாளொன்றுக்கு $SO_2$ இன் ஆகக்கூடியது கந்தகவீரொட்சைட் ஆகக்கூடியது 30 மெற்றிக் தொன்களுக்கு அமையவும் ஒவ்வொரு மேலதிக MW இற்கும் MW ஒன்றிற்கு நாளொன்றுக்கு 25 கிகி $SO_2$ வுடன் சேர்த்தும், MW ஒன்றிற்கு நாளொன்றுக்கு ஆகக்கூடியது 50கிகி $SO_2$ வுடன் புதிய மின் நிலையங்களுக்கு 850 மிகி/$Nm^3$<br>2. ஏலவேயுள்ள மின் நிலையங்களுக்கு எரி பொருள் தரத்தின் மூலம் கட்டுப்படுத்தப் படுதல் வேண்டும். |
| | | நைதரசன் ஒக்சைட்டுகள் (NOx) | 650mg/$Nm^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 150mg/$Nm^3$ |
| | | புகை | 15% ஒளிபுகாநிலை |
| இயற்கை வாயு | C<50 MW | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 75mg/$Nm^3$ |
| | | நைதரசன் ஒக்சைட்டு ($NO_X$) | நீராவிச் சுழலிக்கு 350mg/$Nm^3$ |
| | | | வாயுச் சுழலிக்கு/இணைந்த சுழற்சிச் சுழலிக்கு 250mg/$Nm^3$ |
| | | | உள்ளக எரிநிலை இயந்திரங்களுக்கு 400mg/$Nm^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 100mg/$Nm^3$ |
| | C≥50 MW | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 75mg/$Nm^3$ |
| | | நைதரசன் ஒக்சைட்டு (NOx) | நீராவிச் சுழலிக்கு 300mg/$Nm^3$ |
| | | | வாயுச் சுழலிக்கு/இணைந்த சுழற்சிச் சுழலிக்கு 200mg/$Nm^3$ |
| | | | உள்ளக எரிநிலை இயந்திரங்களுக்கு 350mg/$Nm^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 75mg/$Nm^3$ |

**அட்டவணை II**

*பாகம் I இன் (தொடர்ச்சி)*

| எரி பொருள் | மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|---|
| நப்தா | எதேனும் | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 75mg/Nm$^3$ |
| | | நைதரசன் ஒக்சைட்டுகள் (NOx) | நீராவிச் சுழலிக்கு 350mg/Nm$^3$ |
| | | | வாயுச் சுழலிக்கு/ இணைந்த சுழற்சிச் சுழலிக்கு 250mg/Nm$^3$ |
| | | | உள்ளக எரிநிலை இயந்திரங்களுக்கு 400mg/Nm$^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 75mg/Nm$^3$ |
| மாநகரத் திண்மக் கழிவு | எதேனும் | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 70mg/Nm$^3$ |
| | | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | 400mg/Nm$^3$ |
| | | துகள்மப்பொருள் (PM) | 150mg/Nm$^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | | கார்பன் மொனோக்சைட்டு (CO) | 50mg/Nm$^3$ |
| | | ஐதரசன்குளோரைட்டு (HCI) | 20 mg/Nm$^3$ |
| | | பாதரசம் (Hg) | 0.001mg/Nm$^3$ |
| | | ஈயம் (Pb) | 0.01mg/Nm$^3$ |

பாகம் II

**துணை மின்பிறப்பாக்கிகள்**

| எரி பொருள் | மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|---|
| பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் அல்லது செறிவு எண்ணெய் | எதேனும் | துகள்மப்பொருள் (PM)<br>கந்தகவீரொட்சைட் ($SO_2$)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளவாறான எரிபொருள் தரம் மற்றும் புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப் படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 10% ஒளிபுகாநிலை |

பாகம் III

**கொதிகலன்கள்**

| எரி பொருள் | மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|---|
| எண்ணெய் | C<2 நீராவியின் மெற்றிக் தொன்கள்/ ஒரு மணித்தியாலத்துக்கு | துகள்மப்பொருள் (PM)<br>கந்தகவீரொட்சைட் ($SO_2$)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலமும் எரிபொருள் தரத்தின் மூலமும் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | C≥2 நீராவியின் மெற்றிக் தொன்கள்/ ஒரு மணித்தியாலத்துக்கு | கந்தகவீரொட்சைட் ($SO_2$)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலமும் எரிபொருள் தரத்தின் மூலமும் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 15% ஒளிபுகாநிலை |
| | | துகள்மப்பொருள் (PM) | 100mg/$Nm^3$ |
| உயிரியல் திண்மம் | C<2 நீராவியின் மெற்றிக் தொன்கள் நீராவி /ஒரு மணித்தியாலத்துக்கு | துகள்மப்பொருள் (PM)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | C≥2 நீராவியின் மெற்றிக் தொன்கள் நீராவி /ஒரு மணித்தியாலத்துக்கு | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 15% ஒளிபுகாநிலை |
| | | துகள்மப்பொருள் (PM) | 200mg/$Nm^3$ |
| நிலக்கரி | C<2 நீராவியின் மெற்றிக் தொன்கள்/ நீராவி /ஒரு மணித்தியாலத்துக்கு | துகள்மப்பொருள் (PM)<br>கந்தகவீரொட்சைட் ($SO_2$)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலமும் எரிபொருள் தரத்தின் மூலமும் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | C≥2 நீராவியின் மெற்றிக் தொன்கள்/ நீராவி /ஒரு மணித்தியாலத்துக்கு | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | 500mg/$Nm^3$ |
| | | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 850mg/$Nm^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | | துகள்மப்பொருள் (PM) | 150mg/$Nm^3$ |

பாகம் IV

**வெப்ப திரவ வெப்பமாக்கிகள்**

| எரி பொருள் | மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|---|
| எண்ணெய் | ஒரு மணித்தியாலத்துக்கு C<5000 MJ | துகள்மப்பொருள் (PM)<br>கந்தகவீரொட்சைட் ($SO_2$)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலமும் எரிபொருள் தரத்தின் மூலமும் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | ஒரு மணித்தியாலத்துக்கு C≥5000 MJ | கந்தகவீரொட்சைட் ($SO_2$)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலமும் எரிபொருள் தரத்தின் மூலமும் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 15% ஒளிபுகாநிலை |
| | | துகள்மப்பொருள் (PM) | $100mg/Nm^3$ |
| உயிரியல் திண்மம் | ஒரு மணித்தியாலத்துக்கு C<5000 MJ | துகள்மப்பொருள் (PM)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதி 11 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப் படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | ஒரு மணித்தியாலத்துக்கு C≥5000 MJ | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதி 11 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலம் கட்டுப் படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 15% ஒளிபுகாநிலை |
| | | துகள்மப்பொருள் (PM) | $200mg/Nm^3$ |
| நிலக்கரி | ஒரு மணித்தியாலத்துக்கு C<5000 MJ | துகள்மப்பொருள் (PM)<br>கந்தகவீரொட்சைட் ($SO_2$)<br>நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | ஒழுங்குவிதிகள் 11 மற்றும் 12 இல் தரப்பட்டுள்ளவாறான புகைபோக்கியின் உயரத்தின் மூலமும் எரிபொருள் தரத்தின் மூலமும் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | ஒரு மணித்தியாலத்துக்கு C≥5000 MJ | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | $500mg/Nm^3$ |
| | | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | $800mg/Nm^3$ |
| | | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | | துகள்மப்பொருள் (PM) | $150mg/Nm^3$ |

பாகம் V

**எரியூட்டிகள்**

| மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|
| ஒரு மணித்தியாலத்துக்கு மெற்றிக் தொன் C<1 | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 70mg/$Nm^3$ |
| | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | 400mg/$Nm^3$ |
| | துகள்மப்பொருள் (PM) | 150mg/$Nm^3$ |
| | புகை | 20% ஒளிபுகாநிலை |
| | கார்பன் மொனோக்சைட்டு (CO) | 50mg/$Nm^3$ |
| | ஐதரசன் குளோரைட்டு (HCI) | 20mg/$Nm^3$ |
| | பாதரசம் (Hg) | 0.01mg/$Nm^3$ |
| | ஈயம் (Pb) | 0.05mg/$Nm^3$ |
| | டைஒக்சின் மற்றும் பியூறன்கள் | ஒழுங்குவிதிகள் 14 இல் தரப்பட்டுள்ளவாறான வெப்பநிலை மற்றும் தக்கவைப்புக் காலம் என்பவற்றின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |
| ஒரு மணித்தியாலத்துக்கு மெற்றிக் தொன் C≥1 | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 70mg/$Nm^3$ |
| | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | 300mg/$Nm^3$ |
| | துகள்மப்பொருள் (PM) | 100mg/$Nm^3$ |
| | புகை | 10% ஒளிபுகாநிலை |
| | கார்பன் மொனோக்சைட்டு (CO) | 50mg/$Nm^3$ |
| | ஐதரசன் குளோரைட்டு (HCI) | 15mg/$Nm^3$ |
| | பாதரசம் (Hg) | 0.001mg/$Nm^3$ |
| | ஈயம் (Pb) | 0.01mg/$Nm^3$ |
| | டைஒக்சின் மற்றும் பியூறன்கள் | ஒழுங்குவிதிகள் 14 இல் தரப்பட்டுள்ளவாறான வெப்பநிலை மற்றும் தக்கவைப்புக் காலம் என்பவற்றின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |

பாகம் V இன் *(தொடர்ச்சி)*

**எரியூட்டிகள்**

| *மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C)* | *தீழ்ப்பாக்கியின் வகை* | *வெளியேற்றுகையின் எல்லை* |
|---|---|---|
| ஏதேனும் தொற்றுள்ள கழிவு எரியூட்டிகள் | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | $70mg/Nm^3$ |
| | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | $300mg/Nm^3$ |
| | துகள்மப்பொருள் (PM) | $100mg/Nm^3$ |
| | புகை | *10% ஒளிபுகாநிலை* |
| | கார்பன் மொனோக்சைட்டு (CO) | $50mg/Nm^3$ |
| | ஐதரசன் குளோரைட்டு (HCI) | $15mg/Nm^3$ |
| | பாதரசம் (Hg) | $0.001mg/Nm^3$ |
| | ஈயம் (Pb) | $0.01mg/Nm^3$ |
| | டைஒக்சின் மற்றும் பியூறன்கள் | ஒழுங்குவிதிகள் 14 இல் தரப்பட்டுள்ளவாறான வெப்பநிலை மற்றும் தக்கவைப்புக் காலம் என்பவற்றின் மூலம் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |

பாகம் VI

**நெருப்பிரும்பு உலைகள், வெடிப்பு உலைகள், கற்கரி அடுப்புகள், அடிப்படை ஒட்சிசன் உலைகள், மின்சாரத் தூண்டல் மற்றும் மின்சார வில் உலைகள்**

| *மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C)* | *தீழ்ப்பாக்கியின் வகை* | *வெளியேற்றுகையின் எல்லை* |
|---|---|---|
| ஏதேனும் | துகள்மப்பொருள் (PM) | $150mg/Nm^3$ |
| | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | $800mg/Nm^3$ |
| | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | $500mg/Nm^3$ |
| | புகை | *20% ஒளிபுகாநிலை* |

பாகம் VII

**சீமெந்துச் சூளைகள்**

| மதிப்பிடப்பட்ட வெளியீட்டுக் கொள்ளளவு (C) | தீழ்ப்பாக்கியின் வகை | வெளியேற்றுகையின் எல்லை | |
|---|---|---|---|
| | | தற்போதுள்ளது* | புதியது** |
| ஏதேனும் | துகள்மப்பொருள் (PM) | 400mg/Nm$^3$ | 200mg/Nm$^3$ |
| | கந்தகவீரொட்சைட் ($SO_2$) | 540mg/Nm$^3$ | 270mg/Nm$^3$ |
| | நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | 1250mg/Nm$^3$ | 1000mg/Nm$^3$ |
| | புகை | 20% ஒளிபுகாநிலை | 20% ஒளிபுகாநிலை |

* இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் உள்ள சீமெந்துச் சூளைகள்.

** இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர் தொழிற்படத் தொடங்கும் சீமெந்துச் சூளைகள். (ஒழுங்குவிதி 3 மற்றும் ஒழுங்குவிதி 15)

அட்டவணை III

**தீழ்ப்பாக்கி அடிப்படையிலான நியமங்கள்**

பாகம் I

| தீழ்ப்பாக்கி | செயன்முறை/மூலம் | எரிநிலையில் வெளியேற்றுகையின் எல்லை | எரியாத நிலையில் வெளியேற்றுகையின் எல்லை |
|---|---|---|---|
| துகள்மப்பொருள் (PM) | ஏதேனும் | 150mg/Nm$^3$ | 100mg/Nm$^3$ |
| புகை | ஏதேனும் | 25% ஒளிபுகாநிலை | 25% ஒளிபுகாநிலை |
| கார்பன் மொனோக்சைட்டு (CO) | ஏதேனும் | 900mg/Nm$^3$ | 1100mg/Nm$^3$ |
| கந்தகவீரொட்சைட் ($SO_2$) | நைற்றிக் அமிலம் உற்பத்தித் தொகுதிகள் | 2கிகி/மெற்றிக் தொன் சல்பூரிக் அமில தயாரிப்பு | |
| | வேறு ஏதேனும் | 1000mg/Nm$^3$ | 800mg/Nm$^3$ |
| நைதரசன் ஒக்சைட்டுகள் ($NO_X$) | நைற்றிக் அமிலம் உற்பத்தித் தொகுதிகள் | 1.5கிகி/மெற்றிக் தொன் நைற்றிக் அமில தயாரிப்பு | |
| | வேறு ஏதேனும் | 500mg/Nm$^3$ | 1-1 |
| மொத்த ஆவியாகும் சேதனக் கலவை (TVOC) | ஏதேனும் | 20ppm | 20ppm |

பாகம் II

| தீழ்ப்பாக்கி | செயன்முறை/மூலம் | வெளியேற்றுகையின் எல்லை எரிநிலையில் அல்லது எரியாத நிலையில் |
|---|---|---|
| குளோரீன் ($Cl_2$) | ஏதேனும் | குளோரீன் 35mg/$Nm^3$ |
| ஐதரசன் குளோரைட் (HCl) | ஐதரோகுளோரிக் அமிலத்தை உற்பத்தி செய்யும் பொறித்தொகுதிகள் | ஐதரோகுளோரிக் அமிலத் தயாரிப்பின் மெற்றிக் தொன்னுக்கு 0.08கிகி |
| | ஏதேனும் | ஐதரசன் குளோரைட் 50mg/$Nm^3$ |
| புளோரின் ($F_2$) | ஏதேனும் | புளோரின் 20mg/$Nm^3$ |
| புளோரைட் ($F^-$) ஐதரசன் அல்லது சிலிக்கன்) | பொஸ்பேற் கைத்தொழில் | மூலப்பொருள் உள்ளீட்டின் 0.18 கிகி/மெற்றிக் தொன் |
| | ஏதேனும் | ஐதரசன் புளோரைட் 2 mg/$Nm^3$ |
| ஐதரசன் சல்பைட்டு ($H_2S$) | ஏதேனும் | 1 mg/$Nm^3$ |
| கட்மியம் அல்லது அதன் கலவைகள் | ஏதேனும் | cd யாக 1mg/$Nm^3$ |
| ஈயம் அல்லது அதன் கலவைகள் | ஈயம் உருக்குதல் | Pb யாக 0.2mg/$Nm^3$ |
| | ஏதேனும் | Pb யாக 0.2mg/$Nm^3$ |
| அண்டிமணி அல்லது அதன் கலவைகள் | ஏதேனும் | Sb யாக 0.5mg/$Nm^3$ |
| ஆர்சனிக் அல்லது அதன் கலவைகள் | ஏதேனும் | As ஆக 0.1mg/$Nm^3$ |
| செம்பு அல்லது அதன் கலவைகள் | செம்பு உருக்குதல் | Cu ஆக 1mg/$Nm^3$ |
| | வேறு ஏதேனும் | Cu ஆக 1mg/$Nm^3$ |
| நாகம் அல்லது அதன் கலவைகள் | ஏதேனும் | Zn ஆக 1mg/$Nm^3$ |
| பாதரசம் அல்லது அதன் கலவைகள் | ஏதேனும் | Hg ஆக 0.01mg/$Nm^3$ |
| டையொக்சின்/பியுரான் | ஏதேனும் | 2mg/$Nm^3$ |
| அமோனியா | ஏதேனும் | 10mg/$Nm^3$ |

(ஒழுங்குவிதி 4)

அட்டவணை IV

**நிலையற்ற தூசி (Fugitive Dust Emission) வெளியேற்றுகை நியமங்கள்**

ஏதேனும் செய்முறை இடப்பரப்பிலிருந்து அல்லது இரு வெளியேற்றுகை இடப்பரப்பிலிருந்து காற்றின் மேலோட்டமாக மற்றும் காற்றின் கீழோட்டமாக நிறைவேற்றப்படும் சமாந்தரமான 3 மணித்தியால இடைவெளியில் அளக்கப்படும் புவியீர்ப்பு சார்ந்த மொத்தத் தொங்குநிலைத் துகள்மப் பொருட்களுக்கிடையேயான வித்தியாசமானது (TSPM), 450 Mg/m$^3$ அளவுக்கு அதிகமாகவிருத்தலாகாது.

(அ) அளவீடு மேற்கொள்ளப்படும் இடமானது ஏதேனும் செய்முறை இடப்பரப்பிலிருந்து அல்லது வெளியேற்றுகை இடப்பரப்பிலிருந்து காற்றின் மேலோட்டமாக மற்றும் காற்றின் கீழோட்டமாக 10 மீற்றருக்குள் இருத்தல் வேண்டும்.

(ஆ) காற்றின் திசையானது அளவிடப்படுகின்ற காலப்பகுதியின் காற்றோட்டத்தின் மிக வீரிய திசையாக இருத்தல் வேண்டும்.

(இ) அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் முறை TSPM அளவீட்டுக்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 4)

அட்டவணை V

**நிலையற்ற மெதேன் அல்லாத எளிதில் ஆவியாகின்ற சேதனக் கலவை வெளியேற்றுகை நியமங்கள் (NMVOC)**

எளிதில் ஆவியாகின்ற சேதனக் கலவைகளை வெளியேற்றுகின்ற ஏதேனும் செய்முறை இடப்பரப்பிலிருந்து காற்றின் கீழோட்டம் மற்றும் மேலோட்ட அடிப்படை மீது நிறைவேற்றப்பட்ட இரண்டு, ஒரே நேரத்திலான மெதேன் அல்லாத எளிதில் ஆவியாகின்ற சேதனக் கலவைகளின் அளவீடுகளுக்கு இடையிலான வித்தியாசம் 5ppm முக்கு அதிகமாக இருத்தலாகாது.

(அ) அளவீடு மேற்கொள்ளப்படும் இடமானது ஏதேனும் செய்முறை இடப்பரப்பிலிருந்து அல்லது வெளியேற்றுகை இடப்பரப்பிலிருந்து காற்றின் மேலோட்டமாக மற்றும் கீழோட்டமாக 5 மீற்றருக்குள் இருத்தல் வேண்டும்.

(ஆ) காற்றின் திசையானது அளவிடப்படுகின்ற காலப்பகுதியின் போது காற்றோட்டத்தின் மிக வீரிய திசையாக இருத்தல் வேண்டும் ;

(இ) அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் முறை, மெதேன் அல்லாத எளிதில் ஆவியாகின்ற சேதனக்கலவைகளை அளப்பதற்காக பயன்படுத்தப்படல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 4)

அட்டவணை VI

**நிலையற்ற அமிலத் துகள் மற்றும் அமோனியா வெளியேற்றுகை நியமங்கள்**

ஏதேனும் செய்முறை இடப்பரப்பிலிருந்து நிலையற்ற அமிலத் துகள்கள் மற்றும் நிலையற்ற அமோனியாத் துகள் வெளியேற்றுகைகள் 20 mg/ m3 அளவை விஞ்சுதலாகாது. அளவீடு மேற்கொள்ளப்படும் இடம் செய்முறை இடப்பரப்பிலிருந்து இடப்பரப்பிலிருந்து கீழ்காற்றின் திசையின் 5 மீற்றர்களினுள் இருத்தல் வேண்டும். ஒரு நிமிடத்துக்கு 1 லீற்றர் மாதிரியெடுத்தல் பாய்வுவீததில், மாதிரியெடுத்தல் காலப்பகுதி 3 மணித்தியாலங்களாக இருத்தல் வேண்டும். அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் முறையில் நிலையற்ற அமிலத்துகள் மற்றும் அமோனியத்துகள் வெளியேற்றுகை மட்டங்களைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 4)

அட்டவணை VII

**அஸ்பெஸ்டஸ் இழையின் வெளியேற்றுகை நியமங்கள்**

செய்முறை இடரப்பரப்பில் அஸ்பெஸ்டஸ் இழையின் செறிவுகளானவை, 1 இழை / m3 என்ற அளவைவிட அதிகமாக இருத்தலாகாது. அளவீடு மேற்கொள்ளப்படும் அமைவிடம் செய்முறை இடப்பரப்பிலிருந்து கீழ்காற்றுத் திசையின் 20 மீற்றர்களினுள் இருத்தல் வேண்டும். அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் முறை சுற்றாடலிலுள்ள இழைச் செறிவைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

(ஒழுங்குவிதி 8)

அட்டவணை VIII

**குறித்த ஒட்சிசன் மட்டங்கள்**

| எரிபொருளின் வகை | குறித்த ஒட்சிசன் மட்டம் |
|---|---|
| திரவ மற்றும் வாயு எரிபொருட்கள் | 03% |
| திண்ம எரிபொருட்கள் | 06% |

06- 44